Ours bank with
Bank of Baroda

# மதுரை மணி

Madurai Mani Tamil Evening Daily

தினசரி தமிழ் நாளிதழ் ®

ISO 9001:2015 / ISO 14001:2015: தரச்சான்றிதழ் பெற்ற நிறுவனம்

New College House
(A Heritage Hotel)
2342971 (3 Lines)
4372900 (4 Lines)
99526 02900
95669 84900
College House
Annameenakshi Restaurant (Veg.)
2, Town Hall Road,
Madurai-625 001.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| மதுரை பதிப்பு | *மணி 55 | * ஓசை 187 | உள்ளூர் - 06.07.2026 | திங்கள் | விலை ரூ.4/- | பக்கங்கள்-4 | Website : http://maduraimaninews.com |
| Madurai Edition | *Vol 55 | * Issue 187 | வெளியூர் - 07.07.2026 | செவ்வாய் | Price Rs. 4/- | Pages -4 | Email: maduraimaninews@gmail.com |

ஜோதிடத்தில் சொல்லப்படும் பரிகாரங்கள்!

காரைக்குடி CECRI-ல் 84 பணியிடங்கள்!

8-வது சம்பள கமிஷனில் புதிய சம்பள ஃபார்முலா!

கலைஞர் பாணியை கையில் எடுத்த விஜய்!

## உயர்கல்வித்துறை அமைச்சர், அதிகாரிகளுடன் முதலமைச்சர் விஜய் ஆலோசனை!

சென்னை, ஜூலை. 06–

சென்னை தலைமைச் செயலகத்தில் உயர்கல்வித்துறை அமைச்சர் மற்றும் அதிகாரிகளுடன் முதலமைச்சர் விஜய் ஆலோசனை நடத்தினார். தமிழக சட்டசபையில் இம்மாத இறுதியில் பட்ஜெட் தாக்கல் செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.



இதைத் தொடர்ந்து சென்னை தலைமைச் செயலகத்தில் முதலமைச்சர் விஜய் கடந்த 2–ந்தேதியில் இருந்து துறைவாரியாக அதிகாரிகளுடன் ஆய்வு மேற்கொண்டு வருகிறார்.

இதைத்தொடர்ந்து உயர்கல்வித்துறை அதிகாரிகளுடன் ஆலோசனை மேற்கொண்டார். இதில் அமைச்சர் விஸ்வநாதன் மற்றும் உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

உயர்கல்விதுறையில் உள்ள காலி பணியிடங்களை நிரப்புவது, சர்வதேச அளவிலான உயர்கல்வி நிறுவனங்களுடன் பாடத்திட்ட பரிமாற்றங்கள் குறித்தும் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

பல்கலைக்கழக வேந்தர் விவகாரம், உயர்கல்வித்துறையில் அரசின் கொள்கை முடிவுகள் குறித்து விரிவாக ஆலோசிக்கப்படும். துணை வேந்தர்கள் நியமனம் உள்ளிட்டவை குறித்து விவாதிக்கப்படும்.

நிதி நெருக்கடியில் உள்ள அரசு பல்கலைக்கழகங்களில் நிதிநிலையை சீர் செய்வதற்கான திட்டம் குறித்து ஆலோசனை நடத்தப்படும்.

இது தொடர்ந்து வணிகவரித்துறை அதிகாரிகளுடன் முதலமைச்சர் விஜய் விரிவாக ஆய்வு மேற்கொண்டார்.

## 8-வது சம்பள கமிஷனில் புதிய சம்பள ஃபார்முலா!

புதுடெல்லி, ஜூலை. 06–

மத்திய அரசு ஊழியர்களுக்கான 8வது சம்பள கமிஷனில், குடும்பத்தின் அளவை அடிப்படையாகக் கொண்டு சம்பள கணக்கீட்டில் மாற்றம் செய்ய NC–JCM பரிந்துரை செய்துள்ளது.

தற்போது 4 பேர் குடும்பம் (ஊழியர், துணைவியர், 2 குழந்தைகள்) என்ற அடிப்படையில் சம்பளம் கணக்கிடப்படுகிறது. இதை பெற்றோர்/மாமனார்மாமியார் உட்பட 6 பேர் குடும்பமாக மாற்ற வேண்டும் என கோரப்பட்டுள்ளது.




இதனால் வெயிட்டேஜ் புள்ளிகள் 3.4–இலிருந்து 5.0 ஆக உயர்ந்து, அடிப்படை சம்பளம் அதிகரிக்கும் வாய்ப்பு இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், உணவு, வீட்டு வாடகை, எரிபொருள், மின்சாரம், தண்ணீர் உள்ளிட்ட அத்தியாவசிய செலவுகள் அதிகரித்துள்ளதால், Fitment Factor உயர்த்தப்பட வேண்டும் என்றும் NC–JCM வலியுறுத்தியுள்ளது. தற்போது 3.833வரை உயரலாம் என்ற கோரிக்கை இருந்தாலும், நடைமுறையில் 2 முதல் 2.5 வரை மட்டுமே இருக்கலாம் என மதிப்பிடப்படுகிறது.

## ஆட்சி கவிழ்ப்பு சதி வழக்கு: செந்தில்பாலாஜி, அசோக் ஆஜராகவில்லை - அடுத்தகட்ட நடவடிக்கை தீவிரம்...!

சென்னை, ஜூலை. 06–

த.வெ.க., ஆட்சியை கவிழ்க்க சதி செய்த வழக்கில் செந்தில்பாலாஜி, அசோக்குமார் திருவல்லிக்கேணி போலீஸ் நிலையத்தில் நேரில் ஆஜராக சம்மன் வழங்கப்பட்ட நிலையில் அவர்கள் ஆஜராகா ததால் சட்ட நடவடிக்கைகளை தீவிரப்படுத்த போலீசார் திட்டமிட்டுள்ளனர்.

முதலமைச்சர் விஜய் தலைமையிலான த.வெ.க. ஆட்சியை கவிழ்ப்பதற்கு, திரைமறைவில் அரங்கேறிய சதித்திட்டம் சமீபத்தில் வெளிச்சத்துக்கு வந்தது.




### ரூ.35 கோடி பேரம்

கிருஷ்ணகிரி மாவட்டம் ஊத்தங்கரை தொகுதி எம்.எல்.ஏ. டாக்டர் இளையராஜா, தன்னிடம் ரூ.35 கோடி பேரம் பேசப்பட்டதாக பரபரப்பு புகார் மனுவை சென்னை போலீஸ் கமிஷனர் அமல்ராஜிடம் அளித்திருந்தார்.

இந்த புகார் மனுவில், அவர் கூறிய தகவல்கள் அடிப்படையில் அவரிடம் பேரத்தில் ஈடுபட்டதாக, ஐ.பி.டி.எஸ். என்ற தேர்தல் கருத்துக்கணிப்பு நிறுவனத்தின் நிறுவனர் திருநாவுக்கரசு, முன்னாள் அமைச்சர் செந்தில் பாலாஜியின் ஆதரவாளர்களாக கருதப்படும் சென்னை மேடவாக்கத்தை சேர்ந்த தியாகராஜன், பெசன்ட் நகரை சேர்ந்த நரேஷ், கரூரை சேர்ந்த தி.மு.க. பிரமுகர்களான ரமேஷ், கார்த்தி, சென்னை பள்ளிக்கரணை பகுதியை சேர்ந்த செல்வன், மணப்பாக்கத்தை சேர்ந்த அ.தி.மு.க. பிரமுகர் சீனிவாசன், அஸ்தினாபுரம் ஏரிக்கரை தெருவை சேர்ந்த ராஜேஷ் ஆகிய 8 பேரை தனிப்படை போலீசார் அடுத்தடுத்து கைது செய்தனர்.

### செந்தில் பாலாஜி

த.வெ.க. எம்.எல்.ஏ.க்களை விலைக்கு வாங்க ரூ.180 கோடியில் சதித்திட்டம் தீட்டப்பட்டது என்று கைதானவர்கள் போலீசாரிடம் பரபரப்பு வாக்குமூலம் கொடுத்துள்ளதாகவும் கூறப்படுகிறது.

மேலும், முன்னாள் அமைச்சர் செந்தில் பாலாஜி. அவருடைய சகோதரர் அசோக்குமார் ஆகியோர் கூறியதன் பேரில்தான் இந்த பேரத்தை நடத்தியதாகவும் போலீசாரிடம் அவர்கள் தெரிவித்ததாக கூறப்படுகிறது.

இதைத்தொடர்ந்து அவர்கள் 2 பேரும் போலீசாரின் கைது நடவடிக்கையில் சிக்காமல் இருக்க தலைமறைவு ஆனார்கள்.

### லுக் அவுட் நோட்டீஸ்

அவர்கள் 2 பேரும் வெளிநாடு தப்பி செல்லாமல் இருப்பதற்காக நாட்டில் உள்ள அனைத்து விமான நிலையங்களுக்கும் 'லுக் அவுட் நோட்டீசை திருவல்லிக்கேணி போலீசார் அனுப்பினார்கள். இதனையடுத்து விமான நிலையங்களில் கண்காணிப்பு தீவிரபடுத்தப்பட்டு உள்ளது.

மேலும் இந்த வழக்கு விசாரணைக்கு நேரில் ஆஜராக வேண்டும் என்று செந்தில் பாலாஜி, அசோக்குமார் ஆகிய 2 பேருக்கும் திருவல்லிக்கேணி போலீசார் சம்மன் பிறப்பித்தனர்.

இந்த சம்மனை, கரூர் அருகே ராமேஸ்வரப்பட்டியில் உள்ள அவரது பூர்வீக வீட்டுக்கு திருவல்லிக்கேணி தனிப்படை போலீசார் நேற்று முன்தினம் சென்று, அவரது பெற்றோர் வேலுசாமி–பழனியம்மாளிடம் வழங்கினார்கள்.

அந்த சம்மனில் அவர்கள் 2 பேரும் ஜூலை 6 காலை 10.30 மணியளவில் திருவல்லிக்கேணி போலீஸ் நிலையத்தில் விசார ணைக்கு ஆஜராக வேண்டும்என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன் பேரில் அவர்கள் 2 பேரும் திருவல்லிக்கேணி போலீஸ் நிலையத்தில் இன்று ஆஜராவார்கள் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் 2 பேரும் விசாரணைக்கு ஆஜராகவில்லை.

### சட்ட நடவடிக்கை

இதனால் அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகளை மேலும் தீவிரப்படுத்த போலீசார் திட்டமிட்டுள்ளனர். அதன்படி விசாரணைக்கு ஒத்துழைக்கக் கோரி மீண்டும் 2–வது முறையாக சம்மன் அனுப்ப முடிவு செய்துள்ளனர். அதனை ஏற்று ஆஜராகாத பட்சத்தில், நீதிமன்ற பிடியாணை பெற்று கைது நடவடிக்கை மேற்கொள்ளவும் போலீசார் திட்டமிட்டுள்ளனர். வெளி நாடுகளுக்கு தப்பி செல்லாமல் இருக்க அனைத்து விமான நிலையங்களுக்கும் லுக் அவுட் நோட்டீஸ் வழங்கி உள்ளனர்.

இதனிடையே இந்த வழக்கில் அரசியல் தொடர்புகள், பணப்பரிமாற்றம், பின்னணியில் செயல்பட்ட முக்கிய நபர்கள் குறித்தும் போலீசார் தொடர்ந்து விசாரணை நடத்தி வருகின்றனர். மேலும் தனிப்படை போலீசார் தங்களின் தேடுதல் வேட்டையை கரூரில் நேற்றுடன் நிறைவு செய்துவிட்டு சென்னைக்கு புறப்பட்டு சென்றனர்.

முதலமைச்சர் விஜய் வருகிற 10–ந்தேதி கரூர் மாவட்டத்திற்கு பயணம் மேற்கொள்ள உள்ள நிலையில், அதற்கு முன்பாக இந்த வழக்கில் அதிரடி திருப்பங்கள் ஏற்படலாம் என்பதால் தமிழக அரசியல் களத்தில் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

## உயர்கல்விக்கு புதிய சவால்..!

# 58 பொறியியல் கல்லூரிகளுக்கு பூட்டு AICTE ஒப்புதல் ரத்து

## மாணவர் சேர்க்கைக்கு தாக்கம்!!

புதுடெல்லி, ஜூலை. 06–

2025–26ஆம் கல்வியாண்டில் பல்வேறு காரணங்களுக்காக நாடு முழுவதும் 58 பொறியியல் கல்லூரிகளை மூட அகில இந்திய தொழில்நுட்ப கல்வி கவுன்சில் (AICTE) உத்தரவிட்டுள்ளது மாணவர்களுக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.




அகில இந்திய தொழில்நுட்ப கவுன்சிலின் கீழ் தான் நாடு முழுவதும் பொறியியல் மற்றும் தொழில்நுட்ப கல்வி நிறுவனங்கள் செயல்பட்டு வருகின்றன. பொறியியல் கல்லூரிகள் தரத்துடன் செயல்படுவதை மாணவர்களுக்கு சிறந்த கற்றல் வாய்ப்புகளை தருவதையும் , உறுதி செய்ய வேண்டியது ஏ.ஐ.சி.டி.இ. தான். அந்த வகையில் கல்லூரிகளின் தரநிலைகளை அவ்வப்போது கண்காணித்து விதிகளை மீறி செயல்படும் கல்லூரிகளை மூடுவதற்கான நடவடிக்கையை ஏ.ஐ.சி.டி.இ., எடுத்து வருகிறது.

அந்த வகையில் தான் 2025–26ஆம் கல்வியாண்டில் பல்வேறு காரணங்களுக்காக நாடு முழுவதும் 58 பொறியியல் கல்லூரிகளை மூட ஏ.ஐ.சி.டி.இ. உத்தரவிட்டுள்ளது. பல்வேறு கல்லூரிகளிலும் நடத்தப்பட்ட சோதனையின்போது, குறைவான மாணவர் சேர்க்கை, ஆசிரியர்கள் பற்றாக்குறை, உள்கட்டமைப்பு மற்றும் செயல்பாட்டு விதிமுறைகளுக்கு இணங்காதது போன்றவை கண்டறியப்பட்டதால் 58 பொறியியல் கல்லூரிகளை மூட உத்தரவிடப்பட்டுள்ளது என அதிகாரிகள் கூறுகின்றனர். மூடப்பட்ட 58 கல்வி நிறுவனங்களில், மூன்று அரசு உதவி பெற்றவை, மற்றவை தனியார் நிதியுதவியுடன் செயல்பட்டு வந்தவை. அதிகபட்சமான உத்தர பிரதேசம், மஹாராஷ்டிராவில் தலா 12 கல்லூரிகளும், மத்திய பிரதேசத்தில் 8 கல்லூரிகளும், தெலுங்கானா மற்றும் பஞ்சாபில் தலா 4 கல்லூரிகளும் மூடப்பட்டுள்ளன. ஆந்திரா, ராஜஸ்தான் மாநிலங்களில் தலா 3 கல்லூரிகளும், குஜராத், கர்நாடகா, மஹாராஷ்டிரா, தமிழகத்தில் தலா 2 கல்லூரிகளும் மூடப்பட்டுள்ளன. ஹரியானா, ஒடிஷா, உத்தராகண்ட், மேற்கு வங்கம் ஆகிய மாநிலங்களில் தலா ஒரு கல்லூரி மூடப்பட்டுள்ளன.

இதனை Progressive clo–sure என அழைக்கிறார்கள். அதாவது உடனே இந்த கல்லூரிகள் மூடப்பட்டு விடாது. இந்த பொறியியல் கல்லூரிகளில் நடப்பு கல்வியாண்டிற்கான முதலாமாண்டு மாணவர் சேர்க்கை நடக்காது. அதே வேளையில் இரண்டாம் ஆண்டு , மூன்றாம் ஆண்டு பயின்று வரும் மாணவர்களுக்கு எந்த பாதிப்பும் இருக்காது. அவர்கள் அங்கேயே தங்கள் படிப்புகளை தொடரலாம். இந்த கல்லூரிகளில் படிப்பை முடித்த பொறியியல் பட்டதாரிகளுக்கு, தொழில்நுட்ப நிறுவனங்களில் வேலைவாய்ப்பு முகாமில் பங்கேற்க அனுமதி வழங்கப்படும். எனவே ஏற்கனவே படிக்கும் மாணவர்களுக்கு எந்த ஒரு பிரச்சினையும் இல்லை , ஆனால் புதிதாக யாரும் இங்கே சேர முடியாது. தமிழ்நாட்டில் இரண்டு கல்லூரிகள் மூடப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளதே தவிர அவற்றின் பெயர் வெளியிடப்படவில்லை. எனவே தமிழ்நாட்டு பெற்றோர் 12ஆம் வகுப்பு முடித்த தங்கள் பிள்ளைகளை பொறியியல் படிப்பில் சேர்க்கும் போதும் கவுன்சிலிங்கிலும் கல்லூரி தேர்வு செய்யும் போது அது ஏ.ஐ.சி.டி.இ. அங்கீகாரம் பெற்ற கல்லூரியா என்பதை ஒருமுறைக்கு இருமுறை சரிபார்ப்பது நல்லது.

## தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகத்திற்கு புதிதாக 2000 மின்சார ஏசி பஸ்கள்!

சென்னை, ஜூலை. 06–

தமிழ்நாடு அரசின் போக்குவரத்துத் துறையில் வருவாயைப் பெருக்குவதற்கும்,

பொதுமக்களின் பயண வசதிகளை மேம்படுத்துவதற்கும் பல்வேறு அதிரடி செயல்திட்டங்கள் வகுக்கப்பட்டு, ஒவ்வொன்றாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. இதன் ஒரு பகுதியாக, சாதாரண ஏழை மற்றும் நடுத்தர மக்களும் ஏ.சி. பேருந்துகளில் பயணம் செய்யும் வகையில் புதிய தொலைநோக்குத் திட்டம் தயார் செய்யப்பட்டுள்ளது.

### விரைவில் டெண்டர்

அதன்படி, அடுத்த 3 மாதங்களுக்குள் புதிதாக 2,000 மின்சார ஏசி பேருந்துகளை வாங்குவதற்கு தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம் முடிவு செய்துள்ளது.




இதற்கான அதிகா ரப்பூர்வ டெண்டர் விரைவில் கோரப்பட உள்ளதாக போக்குவரத்துத் துறை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

## திருச்செந்தூர் முருகன் கோயில் தரிசன, பூஜை கட்டண உயர்வை இணையதளத்தில் வெளியிட உயர்நீதிமன்றம் ஆணை!

மதுரை, ஜூலை. 06–

திருச்செந்தூர் முருகன் கோயில் தரிசன, பூஜை கட்டண உயர்வு தொடர்பான விவரத்தை இந்து அறநிலையத்துறை இணையதளத்தில் வெளியிட வேண்டும் என தூத்துக்குடியைச் சேர்ந்த ராம்குமார் ஆதித்தன் என்பவர் தொடர்ந்த வழக்கை விசாரித்த மதுரை உயர்நீதிமன்ற கிளை ஆணையிட்டுள்ளது. திருச்செந்தூர் கோயில் தரிசன கட்டண உயர்வு தொடர்பாக பக்தர்களிடம் கருத்து எதுவும் கேட்கப்படவில்லை என மனுதாரர் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# தலையங்கம்

**மதுரை மணி**

**திங்கட்கிழமை 06.07.2026**

**விசுவாவசு தமிழ் வருடம்**

**ஆனி மாதம் 22-ம் தேதி**

## கட்சி மாறும் எம்.எல்.ஏ.க்களுக்கு என்ன தண்டனை?




கட்சி மாறும் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு என்ன தண்டனை வழங்க வேண்டும் என்பது சட்டம், ஜனநாயகம், வாக்காளர்களின் உரிமை ஆகியவற்றை சமநிலைப்படுத்தும் கேள்வியாகும். இந்தியாவில் ஏற்கனவே கட்சித் தாவல் தடுப்புச் சட்டம் (Anti–Defection Law) உள்ளது. இருப்பினும், அதை மேலும் வலுப்படுத்துவது குறித்து பல விவாதம் தொடர்ந்து நடைபெற்று வருகிறது

**பரிந்துரைகள்:**

1. உடனடி உறுப்பினர் தகுதி நீக்கம் கட்சியை விட்டு வெளியேறும் அல்லது வேறு கட்சியில் இணையும் உறுப்பினர் சட்டமன்ற உறுப்பினர் பதவியை உடனடியாக இழக்க வேண்டும்.
2. மீண்டும் தேர்தலில் போட்டியிட கட்டுப்பாடு பதவி விலகியவுடன் உடனடியாக அதே சட்டமன்ற காலத்திலோ அல்லது குறிப்பிட்ட காலம் (உதா: 12 ஆண்டுகள்) வரை தேர்தலில் போட்டியிட முடியாத வகையில் சட்டம் பரிசீலிக்கப்படலாம்.
3. அமைச்சர் பதவிக்கு தடை கட்சி மாறிய உறுப்பினர், தற்போதைய சட்டமன்ற காலம் முடியும் வரை அமைச்சர் அல்லது அரசுப் பதவி ஏற்க முடியாத வகையில் விதிமுறை கொண்டுவரலாம்.
4. மக்கள் தீர்ப்புக்கு கட்டாயம் செல்ல வேண்டும் கட்சி மாற விரும்பும் உறுப்பினர் முதலில் பதவியை ராஜினாமா செய்து, அதே தொகுதியில் இடைத்தேர்தலில் வெற்றி பெற்று மீண்டும் வர வேண்டும். இதன் மூலம் இறுதி முடிவை வாக்காளர்களே எடுப்பார்கள்.
5. கட்சித் தாவல் வழக்குகளுக்கு காலக்கெடு சபாநாயகர் அல்லது சம்பந்தப்பட்ட அதிகாரி 30 அல்லது 60 நாட்களுக்குள் கட்டாயமாக தீர்ப்பு வழங்கும் சட்ட ஏற்பாடு செய்யலாம்.
6. நிதி மற்றும் சலுகைகள் கட்சி தாவலால் பதவி இழந்தால், குறிப்பிட்ட காலத்திற்கு சில சட்டமன்ற சலுகைகள் அல்லது குழுப் பதவிகள் வழங்கப்படாத வகையில் விதிமுறைகள் இருக்கலாம்.

அதே நேரத்தில், எந்தத் தண்டனையும் அரசியலமைப்புச் சட்டம், கருத்துச் சுதந்திரம் மற்றும் மக்களாட்சியின் அடிப்படை உரிமைகளை மீறாமல் இருக்க வேண்டும். உண்மையான கொள்கை வேறுபாடு காரணமாக கட்சியை விட்டு விலகுபவர்களுக்கும், வெறும் பதவி அல்லது அதிகாரத்திற்காக கட்சி மாறுபவர்களுக்கும் இடையிலான வேறுபாட்டை சட்டம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

முக்கிய கருத்து: ஜனநாயகத்தில் இறுதி அதிகாரம் மக்களுக்கே சொந்தமானது. எனவே, கட்சி மாறும் உறுப்பினர் தனது பதவியை ராஜினாமா செய்து மீண்டும் மக்களின் தீர்ப்பைப் பெறுவது தான் ஜனநாயகக் கோட்பாட்டிற்கு மிகவும் பொருத்தமான அணுகுமுறை.

## முதல்-அமைச்சர் மாநில இளைஞர் விருது: விண்ணப்பம் செய்ய கால அவகாசம் நீட்டிப்பு!




சென்னை, ஜூலை. 06–

தமிழக அரசு சார்பில் வழங்கப்படும் முதல்–அமைச்சர் மாநில இளைஞர் விருதுக்கு விண்ணப்பம் செய்வதற்கான கால அவகாசம் நீட்டிப்படுவதாக அறிவிப்பு வெளியாகியுள்ளது. இது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது;–

“சமுதாய வளர்ச்சிக்காக தன்னார்வத்துடன் சேவை யாற்றும் இளைஞர்களின் பணியை அங்கீகரிக்கும் பொருட்டு, முதல்–அச்சர் மாநில இளைஞர் விருது ஆண்டுதோறும் சுதந்திர தின விழாவில் 3 ஆண்கள் மற்றும் 3 பெண்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. 2026 ஆம் ஆண்டிற்கான விருதிற்கு விண்ணப்பி ப்பதற்கான கடைசி நாள் இன்றுடன் (06.07.2026) முடிவடைகிறது. இதற்கான நாளை 13.01.2026 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

இந்த விருதிற்கு 15 முதல் 35 வயதுக்குட்பட்ட ஆண்கள் மற்றும் பெண்கள் விண்ண ப்பிக்கத் தகுதியுடையவர்கள். விண்ணப்பதாரர் 01.04.2025 அன்று 15 வயது நிரம்பிய வராகவும், 31.03.2026 அன்று 35 வயதிற்குள் உள்ளவரா கவும் இருக்க வேண்டும். கடந்த நிதியாண்டில் (01.04.2025 முதல் 31.03.2026 வரை) சமுதாய நலனுக்காகத் தன்னார்வ அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட, உறுதிப்படுத்தக்கூடிய மற்றும் அளவிடக்கூடிய சேவைகள் மட்டுமே பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

விண்ணப்பதாரர் விண்ணப்பிப்பதற்கு முன் குறைந்தபட்சம் 5 ஆண்டுகள் தமிழகத்தில் குடியிருந்த வராக இருக்க வேண்டும். (சான்று இணைக்கப்பட வேண்டும்) மத்திய மற்றும் மாநில அரசுகள், பொது த்துறை நிறுவனங்கள், பல்கலைக்கழகங்கள், கல்லூரிகள் மற்றும் பள்ளி களில் பணியாற்றுபவர்கள் இவ்விருதிற்கு விண்ணப்பி க்க இயலாது. மேலும், விண்ணப்பதாரரின் உள்ளூர் மக்களிடையிலான நன்மதிப்பும் சமூகச் செல்வாக்கும் பரிசீலனையில் கருத்தில் கொள்ளப்படும்.

இவ்விருதிற்கான விண்ணப்பங்களை தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் இணையதளம் www.sdat.tn.gov.in வாயிலாக மட்டுமே சமர்ப்பிக்க வேண்டும். இணையதளம் மூலம் விண்ணப்பிக்க கடைசி நாள் 13.07.2026 அன்று மாலை 5.45 மணி வரை நீட்டிக்கப்ப ட்டுள்ளது. எனவே, தகுதியு டையவர்கள் உரிய காலத்தி ற்குள் இணையதளம் வாயி லாக விண்ணப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது. 2026 ஆம் ஆண்டிற்கான இவ்விருது 15.08.2026 அன்று நடைபெறவுள்ள சுதந்திர தின விழாவில் வழங்கப்படவுள்ளது. இவ்விருதிற்குத் தேர்வு செய்யப்படுவோருக்கு ரூ.1,00,000/– ரொக்கப் பரிசு, பாராட்டுப் பத்திரம் மற்றும் பதக்கம் வழங்கப்படும்.”

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கலைஞர் பாணியை கையில் எடுத்த விஜய்!




சென்னை, ஜூலை. 06–

தமிழ்நாட்டில் ஏப்ரல் மாதம் நடந்த சட்டமன்ற தேர்தலில் தவெக பெரும்பான்மை இடங்களில் வெற்றி பெற்று கூட்டணி கட்சிகளின் ஆதரவுடன் ஆட்சி அமைத்துள்ளது. முதலமைச்சராக விஜய் பொறுப்பேற்று 2 மாதங்கள் முடிய போகின்றன. விஜய் தலைமையிலான அரசு முன்னாள் முதலமைச்சரும் மறைந்த திமுக தலைவருமான கலைஞர் கருணாநிதியை பின்பற்றி ஒரு முயற்சியை எடுத்திருக்கிறது.

தமிழ்நாடு அரசின் சார்பில் 15 ஆண்டுகளுக்கு பிறகு உலகத் தமிழ் மாநாட்டை நடத்த முதலமைச்சர் விஜய் திட்டமிட்டுள்ளார். இதுகுறித்து ஆலோசனை நடத்த அமைச்சர் ராஜ்மோகன் அமெரிக்காவுக்கு பயணம் மேற்கொண்டுள்ளார். மறைந்த முன்னாள் முதலமைச்சர் கருணாநிதி தமிழ் மொழி மீது தீராத பற்று கொண்டவர். அவர் தலைமையில் கடந்த 2010ஆம் ஆண்டு கோவையில் உலகத் தமிழ்செம்மொழி மாநாடு பிரம்மாண்டமாக நடத்தப்பட்டது.

கோவை தமிழ் செம்மொழி மாநாடு கோடிக்கணக்கான தமிழ் மக்கள் மத்தியில் நீங்கா இடம் பிடித்த ஒரு நிகழ்வு என கூறலாம்.

உலகெங்கிலும் உள்ள தமிழர்கள் ஒன்றிணையும் ஒரு நிகழ்வாகவும் தமிழ் மொழியின் சிறப்பை உலகிற்கே உணர்த்தும் ஒரு நிகழ்வாகவும் இது அமைந்தது. அதன் பின்னர் ஒரு பிரம்மாண்ட தமிழ் மொழி மாநாடு விரைவில் நடக்க உள்ளது.

15 ஆண்டுகளுக்கு பிறகு உலகத் தமிழ் மாநாட்டை மீண்டும் நடத்த தமிழக அரசு தற்போது திட்டமிட்டுள்ளது. இதற்கான முதற்கட்ட பணிகள் முதலமைச்சர் விஜயின் ஒப்புதலுடன் தொடங்கிவிட்டன என இந்தியன் எக்ஸ்பிரஸ் வெளியிடும் செய்தி குறிப்பிடுகிறது. இந்த மாநாட்டை ஒரே இடத்தில் மட்டும் நடத்தாமல், உலகெங்கிலும் உள்ள தமிழ் அறிஞர்கள், ஆய்வாளர்கள், கல்வியாளர்களை ஒன்றிணைக்கும் வகையில் அமெரிக்கா, இங்கிலாந்து போன்ற பல்வேறு நாடுகளில் தொடர் அமர்வுகளாக நடத்த திட்டமிட்டுள்ளதாக அரசு வட்டாரங்கள் கூறுகின்றன. உலகத் தமிழர்களை இணைப்பதே இந்த மாநாட்டின் முக்கிய நோக்கமாக பார்க்கப்படுகிறது. இந்த மாநாட்டுக்கான ஏற்பாடுகள் மற்றும் செயல்திட்டங்கள் குறித்து அரசு தீவிரமாக திட்டமிட்டுவரும் நிலையில், உலகளாவிய தமிழ் அறிஞர்கள், கல்வியாளர்கள், புலம்பெயர்ந்த தமிழர்களை சந்தித்து அவர்களின் கருத்துகளை பெறக தமிழ் வளர்ச்சித் துறை அமைச்சர் ராஜ்மோகன் அமெரிக்காவுக்கு பயணம் மேற்கொண்டுள்ளார்.

## மாநிலங்களவையின் 3 இடங்களுக்கான இடைத்தேர்தல் தேதி அறிவிப்பு!

மேற்குவங்காளம், ஜூலை. 06–

மேற்குவங்கத்தில் காலியாக உள்ள 3 மாநிலங்களவை இடங்களுக்கான இடைத்தேர்தல் ஜூலை 24ஆம் தேதி நடைபெறும் என்று தேர்தல் ஆணையம் திங்கள்கிழமை அறிவித்துள்ளது.

மேற்குவங்கத்தில் திரிணமூல் காங்கிரஸ் கட்சியின் அதிருப்தி எம்பிக்களான சுகேந்து சேகர் ராய், சுஷ்மிதா தேவ் மற்றும் பிரகாஷ் சிக் பரைக் ஆகியோர் தங்களது மாநிலங்களவை எம்பி பதவியை அண்மையில் ராஜிநாமா செய்தனர். இதையடுத்து காலியாக உள்ள 3 மாநிலங்களவை இடங்களுக்கான இடைத்தேர்தல் ஜூலை 24ஆம் தேதி நடைபெறும் என்று தேர்தல் ஆணையம் திங்கள்கிழமை அறிவித்துள்ளது.

மேலும் ஜூலை 24–ஆம் தேதி மாலையிலேயே வாக்குகள் எண்ணப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்குவங்க பேரவைத் தேர்தலில் பாஜக அமோக வெற்றி பெற்றுள்ளதால், இந்தமூன்றுஇடங்களுக்கான இடைத்தேர்தலுக்குப் பிறகு மாநிலங்களவையில் அதன் பலம் அதிகரிக்கவுள்ளது.

சமீபத்திய மேற்கு வங்க பேரவைத் தேர்தலில் திரிணமூல் காங்கிரஸ் படுதோல்வியடைந்ததைத் தொடர்ந்து, அக்கட்சியில் பிளவுகளும் உள்கட்சி பூசல்களும் உச்சமடைந்துள்ளன. திரிணமூல் காங்கிரஸுக்கு மொத்தமுள்ள 80 எம்எல்ஏக்களில் 58 அதிருப்தி எம்எல்ஏக்கள், மம்தாவுக்கு எதிராக தனி அணியாக பிரிந்துள்ளனர்.

கட்சியின் மக்களவை எம்.பி.க்கள் 29 பேரில் 20 பேர் தனி அணியாக பிரிந்து, அதிகம் அறியப்படாத இந்திய தேசியவாத குடி மக்கள் கட்சியுடன் தங்களை இணைத்துக் கொண்டதோடு, பாஜக கூட்டணிக்கு ஆதரவளித்துள்ளனர். கட்சியின் மாநிலங்களவை எம்.பி.க்கள் 3 பேர் ஏற்கெனவே ராஜிநாமா செய்துவிட்ட நிலையில், மேலும் சிலர் பதவி விலகக் கூடும் எனத் தெரிகிறது.

## வரலாற்றையே மாற்ற சிலரே வருவார்கள்! முதல்வர் விஜய்க்கு சி. விஜயபாஸ்கர் புகழாரம்!

சென்னை, ஜூலை. 06–

சென்னை அடுத்த பனையூரில் உள்ள கட்சி அலுவலகத்தில் புதிதாக தவெகவில் இணைந்தவர்களை முதல்வர் விஜய் சனிக்கிழமை நேரில் சந்தித்து வாழ்த்து தெரிவித்தார்.


அந்த சந்திப்பின் போது எடுக்கப்பட்ட புகைப்படத்தை எக்ஸ் தளத்தில் பகிர்ந்து சி. விஜயபாஸ்கர் தெரிவித்திருப்பதாவது:


”வரலாறு எழுத பலர் வருவார்கள்... வரலாற்றையே மாற்ற சிலரே வருவார்கள்!

தமிழ்நாட்டு மக்களின் எதிர்பார்ப்பை மாற்றத்தின் ஆட்சியாக மலரச் செய்து, புதிய அரசியல் வரலாற்றை படைத்து வரும் தமிழக வெற்றிக் கழகத்தின் தலைவர்; முதலமைச்சர் சி. ஜோசப் விஜய்யை நேரில் சந்தித்து வாழ்த்து பெற்ற நெஞ்சம் நிறைந்த தருணம்!

வெற்றித் தலைவர் பாதையில்... மக்களுக்கான பயணம்... அதே உறுதியோடு தொடரும்!” என்று குறிப்பிட்டுள்ளார்.

## அமைச்சர் ஆதவ் அர்ஜூனாவுக்கு எதிராக திமுக தொடர்ந்த வழக்கு சுப்ரீம் கோர்ட்டில் ஜூலை. 7-ல் விசாரணை!





சென்னை, ஜூலை. 06–

அமைச்சர் ஆதவ் அர்ஜூனாவுக்கு எதிரான வழக்கை அவசரமாக விசாரிக்க வேண்டும் என்ற திமுகவின் கோரிக்கையை சுப்ரீம் கோர்ட் ஏற்றது. ஆதவ் அர்ஜூனாவுக்கு எதிரான வழக்கை ஜூலை 7–ல் விசாரிப்பதாக சுப்ரீம் கோர்ட் அறிவித்துள்ளது.

## இந்தியாவின் முதல் மனித விண்வெளி பயணம் வெற்றி!




திருப்பதி, ஜூலை. 06–

மனிதனை விண்ணுக்கு அனுப்பும் ‘ககன்யான்’ திட்டத்துக்கான முதல் தரை தள சோதனை வெற்றிகரமாக நடத்தப்பட்டது என்று இஸ்ரோ விஞ்ஞானிகள் கூறினர்.


மனிதர்களை விண்வெளிக்கு அனுப்பும் ‘ககன்யான்’ என்ற கனவு திட்டத்தை செயல்படுத்தும் பணியில் இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவன (இஸ்ரோ) விஞ்ஞானிகள் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர். பிரதமர் மோடி கடந்த 2018–ம் ஆண்டு அறிவித்த இந்த திட்டம் மூலம் 3 பேர் கொண்ட குழுவினர் பூமியில் இருந்து 400 கி.மீ. உயரத்திலுள்ள சுற்றுப்பாதைக்கு 3 நாட்கள் பயணமாக அனுப்பி வைக்கப்படுவார்கள்.

பின்னர் இந்திய கடற்பரப்பில் பாதுகாப்பாக தரையிறக்குவதன் மூலம் மனித விண்வெளி பயணத்திறனை நிரூபிப்பதை நோக்கமாக கொண்டுள்ளது இந்த திட்டம். இந்த ஆண்டு டிசம்பர் மாதம் ஆளில்லா ராக்கெட்டில் ‘வயோமித்ரா’ என்ற எந்திர மனிதனை விண்வெளிக்கு அனுப்பி சோதனை நடத்தப்பட உள்ளது.

தொடர்ந்து, 2 ஆளில்லா ராக்கெட்டுகளை அனுப்பவும், அடுத்த ஆண்டு (2027) மார்ச் மாதம் மனிதர்களை அனுப்பவும் திட்டமிடப்பட்டு உள்ளது. இதற்காக இஸ்ரோ 8 ஆயிரத்துக்கும் மேற்பட்ட சோதனைகளை செய்துள்ளது. இதில் 85 சதவீத சோதனைகள் நிறைவடைந்துள்ளன. இந்தநிலையில், சோதனைகளுக்கான துணை சுற்றுப்பாதை ராக்கெட் ‘ககன்யான்’ குழு கலனுக்கான முக்கிய அமைப்புகளை, குறிப்பாக பாராசூட் வேகக்குறைப்பு அமைப்பை சரிபார்ப்பதற்காக வடிவமைக்கப்பட்ட ஒரு பிரத்யேக திட மோட்டாரின் முதல் தரை தள சோதனை, ஆந்திர மாநிலம், திருப்பதி மாவட்டத்தில் உள்ள ஸ்ரீஹரிகோட்டா, சதீஷ்தவான் விண்வெளி ஆய்வு மையத்தில் வெற்றிகரமாக நடந்தது.

இதுகுறித்து இஸ்ரோ விஞ்ஞானிகள் கூறும்போது, ‘ககன்யான் சோதனை பயணங்களை நடத்துவதற்கு திட மோட்டார் ஒரு முக்கிய அங்கமாகும். ககன்யான் குழுகலத்தின் வேகக்குறைப்பு அமைப்பை சரிபார்ப்பதற்காக, ஒருங்கிணைந்த பாராசூட் சோதனைகளை மேற்கொள்ள ஒரு சோதனைத்தளம் உருவாக்கப்பட்டு உள்ளது. இந்த சோதனை பயணங்களின் போது. குழுவினர் பயணிக்கும் கலம் தரையில் இருந்து 10 முதல் 17 கி.மீ. உயரத்துக்கு கொண்டு செல்லப்பட்டு, விண்கலத்தில் இருந்து பிரிக்கப்படும். கடலில் விழுவதற்கு முன்பு, குழு கலத்தின் வேகத்தை குறைப்பதற்காக 10 பாராசூட்டுகள் தொடர்ச்சியாக விரிக்கப்படும்.

சோதனையின்போது மோட்டாரின் செயல்திறன் அளவுருக்கள் எதிர்பார்த்தபடியே இருந்தது. இதன் மூலம் சோதனை முழுமையாக வெற்றி பெற்றுள்ளது’ என்றனர்.



## ஜோதிடத்தில் சொல்லப்படும் பரிகாரங்கள்!



**1. வேலைவாய்ப்பு தடை நீங்க**

அறிகுறிகள்: வேலை கிடைக்காமை, பதவி உயர்வு தாமதம், தொழிலில் முன்னேற்றமின்மை.

**பரிகாரங்கள்:**

தொடர்ந்து 11 செவ்வாய்க்கிழமைகள் விநாயகர் வழிபாடு செய்து அருகம்புல் மாலை சாற்றுதல்.

சனிக்கிழமைகளில் நவகிரக சன்னதியில் எள் எண்ணெய் தீபம் ஏற்றுதல்.

ஆஞ்சநேயர் கோவிலில் வெற்றிலை மாலை சாற்றி வழிபடுதல்.

ஏழை மாணவர்களுக்கு நோட்டு, பேனா, கல்வி உபகரணங்கள் தானமாக வழங்குதல்.

தினமும் காலை சூரியனை வணங்கி நீர் அர்ப்பணித்தல்.

நேர்மையான முயற்சி, திறன் மேம்பாடு மற்றும் புதிய வேலைவாய்ப்புகளுக்கு தொடர்ந்து விண்ணப்பித்தல்.

**2. கல்வியில் வெற்றி பெற**

அறிகுறிகள்: படிப்பில் கவனக்குறைவு, தேர்வு பயம், நினைவாற்றல் குறைவு.

**பரிகாரங்கள்:**

புதன்கிழமைகளில் சரஸ்வதி தேவியை வழிபடுதல்.

“ஓம் ஐம் சரஸ்வத்யை நம:” என்ற மந்திரத்தை 108 முறை ஜபித்தல்.

படிக்கத் தொடங்கும் முன் விநாயகரை வணங்குதல்.

ஏழை மாணவர்களுக்கு புத்தகங்கள் வழங்குதல்.

கல்விக்காக பயன்படுத்தும் அறையை சுத்தமாகவும் அமைதியாகவும் வைத்திருத்தல்.

தினமும் நிர்ணயிக்கப்பட்ட நேரத்தில் படிக்கும் பழக்கத்தை கடைபிடித்தல்.

**3. குடும்ப ஒற்றுமை ஏற்பட**

அறிகுறிகள்: கணவன்மனைவி கருத்து வேறுபாடு, குடும்ப சண்டை, உறவினர் பிரச்சினைகள்.

**பரிகாரங்கள்:**

வெள்ளிக்கிழமைகளில் மகாலட்சுமி வழிபாடு.

மாதம் ஒருமுறை குலதெய்வ கோவிலுக்கு குடும்பத்துடன் சென்று வழிபடுதல்.

திருமணமான தம்பதிகள் இணைந்து தீபம் ஏற்றி பிரார்த்தனை செய்தல்.

அன்னதானம் அல்லது ஏழை குடும்பங்களுக்கு உணவு வழங்குதல்.

பெரியோரின் ஆசீர்வாதம் பெறுதல்.

குடும்ப உறுப்பினர்களுடன் தினமும் நேரம் ஒதுக்கி அமைதியாக உரையாடுதல்.

**4. திருமண தடை நீங்க**

**பரிகாரங்கள்:**

செவ்வாய்க்கிழமைகளில் முருகன் வழிபாடு.

வெள்ளிக்கிழமைகளில் அம்மன் கோவிலில் எலுமிச்சை தீபம் ஏற்றுதல்.

திருமண உதவி தேவைப்படும் ஏழை பெண்களுக்கு ஆடை அல்லது மங்களப் பொருட்கள் வழங்குதல்.

பெற்றோரின் ஆசீர்வாதத்துடன் திருமண முயற்சிகளை தொடர்ந்து மேற்கொள்ளுதல்.

**5. பொருளாதார முன்னேற்றம்**

**பரிகாரங்கள்:**

வெள்ளிக்கிழமைகளில் மகாலட்சுமி அஷ்டோத்திரம் பாராயணம்.

வீட்டில் தினமும் மாலை விளக்கு ஏற்றுதல்.

தேவையற்ற செலவுகளை குறைத்து சேமிப்பு பழக்கத்தை வளர்த்தல்.

அன்னதானம் மற்றும் தர்மம் செய்தல்.

கடன் வாங்குவதை திட்டமிட்டு கட்டுப்படுத்துதல்.

**6. உடல்நலம் மேம்பட**

**பரிகாரங்கள்:**

ஞாயிற்றுக்கிழமைகளில் சூரிய வழிபாடு.

நோயாளிகளுக்கு பழங்கள் அல்லது மருந்து உதவி செய்தல்.

தினசரி யோகா, தியானம் மற்றும் நடைப்பயிற்சி மேற்கொள்ளுதல்.

தேவையான மருத்துவ பரிசோதனைகளை தவறாமல் செய்துகொள்ளுதல்.

**7. மன அமைதி கிடைக்க**

**பரிகாரங்கள்:**

தினமும் காலை 1015 நிமிடங்கள் தியானம் செய்தல்.

“ஓம் நமசிவாய” அல்லது தங்களின் இஷ்ட தெய்வ மந்திரத்தை ஜபித்தல்.

கோவில் தரிசனம் செய்து அமைதியாக பிரார்த்தனை செய்தல்.

தேவையற்ற கோபம், பொறாமை, மன அழுத்தத்தை குறைக்கும் பழக்கங்களை வளர்த்தல்.

தினமும் குறைந்தது 78 மணி நேரம் தூங்குதல்



திண்டுக்கல் மாவட்டம், கன்னிவாடி முதல்நிலை பேரூராட்சிப் பகுதியில் செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் அமைக்கப்பட்ட தமிழக அரசின் திட்டங்கள் குறித்த புகைப்படக் கண்காட்சியினை ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டு பார்வையிட்டனர்.

## நலம் நலமறிய..! மருத்துவ குறிப்புகள்



## கெட்ட கொழுப்பை குறைக்கும் 5 இதய நண்பன் உணவுகள்!



மனித உடலில் தங்கியிருக்கும் அதிகளவிலான உடற்கொழுப்பு அல்லது தீய கொலஸ்ட்ரால் அளவை சரியான உணவுப்பழக்கத்தின் மூலமாக சரிசெய்யலாம் என்கின்றன ஆய்வுகள். உடலில் சேரும் அதிக கொழுப்பு, ஹார்ட் அட்டாக், ஸ்ட்ரோக் போன்றவற்றிற்கான அபாய அளவினை அதிகரிக்கிறதாம்.

'ஹைப்பர்கொலஸ்ட்ரோலெமியா' என்கிற மருத்துவப் பெயரால் அழைக்கப்படும் அதிகப்படி கொலஸ்ட்ரால், ரத்தக்குழாய்களில் எக்கச்சக்கமாக கொழுப்பு மற்றும் எடைகூட்டும் பொருட்கள் சேர்வதால் ஏற்படுகிறது. இதனால் உடல் ரத்த ஓட்டம் குறைந்து, நெஞ்சுவலி, திடீர் வலிப்பு நோய் போன்றவற்றிற்கான ரிஸ்கை அதிகமாக்குகிறது. எந்தவித முன்னறிவிப்பும் இன்றி உடலில் சேரும் இந்த கொலஸ்ட்ரால் அளவினை ரத்த மாதிரி ஆய்வின் மூலம் மட்டுமே கண்டறிய முடியும்.

கொலஸ்ட்ராலைக் குறைக்கும் உணவுகளை சரியான முறையில் உணவில் சேர்த்துக்கொள்வதன் மூலமாக இதயத்தின் ஆரோக்கியத்தை கெட்ட கொலஸ்ட்ராலிடம் இருந்து காப்பாற்ற முடியும்.

* ஹோல் க்ரைன்ஸ் எனப்படும் ஓட்ஸ், தினை, பார்லி போன்றவற்றை உணவில் சேர்த்துக் கொள்ளலாம். இவற்றில் உள்ள பீட்டா குளுகன் உடலில் சேரும் கெட்ட கொழுப்பினை அழிக்ககூடிய திறன் கொண்டது.

* பீன்ஸ், பட்டாணி, சிவப்பு ராஜ்மா போன்ற பருப்பு வகைகள் புரதச்சத்து வாய்ந்தவை. இதயத்தை பாதிக்கும் ரத்தக் கொதிப்பு, ரத்தக் கொழுப்புக் கட்டிகள் ஆகியவற்றை குறைக்கும் தன்மை கொண்டவை.

* பாதாம், வால்நட், வேர்க்கடலை போன்ற நட் வகைகளையும் உணவில் சரிவிகித அளவில் சேர்த்துக்கொள்வது நன்மை பயக்கும். நல்ல கொழுப்பை உற்பத்தி செய்யும் தன்மை கொண்ட இவற்றால், இதயத்திற்கும் நலம். நார்ச்சத்து, மினரல்களையும் அதிகம் கொண்ட உணவுப்பொருட்கள் இவை.

* பூண்டில் இருக்கும் மருத்துவகுணம் உடலின் கொழுப்பை குறைக்கும் சக்தி வாய்ந்தது என்கின்றன அறிவியல் ஆய்வுகள். பூண்டில் இருக்கும் அல்லிசின் என்னும் வேதிப்பொருள், உடலில் காணப்படும் கொழுப்புப்புரதத்தை குறைத்து, இதயத்தைக் காக்கக்கூடியது.

*பெரிஸ் எனப்படும் பழவகைகள் நார்ச்சத்து அதிகம் கொண்டவை. சிவப்பு ராஸ்பெரிஸ், இனிப்பு செரி, ப்ளூபெரி, ஸ்ட்ராபெரி ஆகியவை உடலின் கொழுப்பை சமநிலைப்படுத்தக்கூடியவை என்கிறது ஆய்வொன்று. ஆன்டிஆக்சிடண்ட் நிறைந்த இவற்றை டயட்டில் சேர்த்துக்கொள்வது நல்லது.

எனினும், சரியான உணவு முறையுடன் மருத்துவரின் ஆலோசனையும் உடலில் கெட்ட கொழுப்பு சேர்வதில் இருந்து உங்களை பாதுகாத்துக்கொள்ள மிக அவசியம் எனப்து குறிப்பிடத்தக்கது.

**ஆம்ஸ்ட்ராங் 2-ம் ஆண்டு நினைவு தினம்:**

# குற்றவாளிகளை கைது செய்ய வலியுறுத்தி 7 தீர்மானங்கள்!




சென்னை, ஜூலை. 06–

பகுஜன் சமாஜ் கட்சியின் முன்னாள் தமிழக தலைவர் ஆம்ஸ்ட்ராங் கொலை செய்யப்பட்டு 2 ஆண்டுகள் நிறைவடைந்ததை முன்னிட்டு, ஆவடியை அடுத்த பொத்தூரில் உள்ள அவரது நினைவிடத்தில் நினைவேந்தல் நிகழ்ச்சி நடைபெற்றது. ஆம்ஸ்ட்ராங் மனைவியும், தமிழக பகுஜன் சமாஜ் கட்சியின் பொதுச்செயலாளருமான பொற்கொடி, அஞ்சலி செலுத்திய பின்னர், கொலை வழக்கை வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தின் கீழ் பதிவு செய்தல், மூத்த வழக்கறிஞர் பா.ப. மோகனை அரசு தரப்பு வழக்கறிஞராக நியமித்தல், ஓய்வுபெற்ற நீதிபதி தலைமையில் விசாரணை ஆணையம் அமைத்தல் உள்ளிட்ட 7 தீர்மானங்களை நிறைவேற்றினார்.

நிகழ்ச்சியில் அமைச்சர் வன்னி அரசு, வைகோ, ஜி.கே. வாசன், முன்னாள் அமைச்சர்கள் ஜெயக்குமார், மூர்த்தி, எம்.பி. சசிகாந்த் செந்தில், எம்.எல்.ஏ. விஜய்பிரபு, திரைப்பட இயக்குநர்கள் வெற்றிமாறன், பா. ரஞ்சித் உள்ளிட்ட பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்கள் மற்றும் அமைப்பினர் அஞ்சலி செலுத்தினர்.

# அமெரிக்க அதிபர் டிரம்ப் - ரஷ்ய அதிபர் புடின் மீண்டும் பேச்சு!



மாஸ்கோ, ஜூலை. 06–

அமெரிக்க அதிபர் டிரம்பும், ரஷ்ய அதிபர் புடினும் தொலைபேசியில் சுமார் ஒன்றரை மணிநேரம் பேசியுள்ளனர். அப்போது, உக்ரைனுடனான போரை முடிவுக்கு கொண்டு வர உதவுவதாக அதிபர் டிரம்ப் மீண்டும் தெரிவித்துள்ளார்.

துருக்கியில் நாளை தொடங்கவுள்ள நேட்டோ உச்சிமாநாட்டில் அமெரிக்க அதிபர் டிரம்ப் கலந்து கொள்ள இருக்கிறார். இந்த சூழலில் இரு தலைவர்களும் தொலைபேசியில் பேசியுள்ளனர். அப்போது, அமெரிக்காவின் 250 சுதந்திர தினத்தையொட்டி, அதிபர் டிரம்புக்கும், அந்நாட்டு மக்களுக்கும் ரஷ்ய அதிபர் புடின் வாழ்த்து தெரிவித்துக் கொண்டார்.

சுமார் 90 நிமிடம் நடைபெற்ற இருவரின் உரையாடல் குறித்து ரஷ்ய வெளியுறவுத்துறை வெளியிட்ட அறிக்கையில்; இருநாட்டு தலைவர்களின் இந்த உரையாடல் வர்த்தக ரீதியாகவும், மிகவும் ஆக்கப்பூர்வமாகவும் இருந்தது.

உக்ரைனுடனான போரை விரைவாக நிறுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்க உதவுவதாக அதிபர் டிரம்ப் கூறினார், இவ்வாறு தெரிவித்துள்ளது. இந்தாண்டில் மட்டும் அமெரிக்க அதிபர் டிரம்பும், ரஷ்ய அதிபர் புடினும் 4வது முறையாக பேசியிருப்பது குறிப்பிடத்தக்கது.

# இளையராஜா பாடலை ஜி.வி.பிரகாஷ் பயன்படுத்த தடை; ஐகோர்ட்!



சென்னை, ஜூலை. 06–

இசையமைப்பாளர் இளையராஜா பாடலை ஜி.வி.பிரகாஷின் படத்தில் பயன்படுத்த தடை விதித்து சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

1980ல் வெளியான நடிகர் ரஜினியின் முரட்டுக்காளை படத்தில் இளையராஜா இசையில் 'பொதுவாக என் மனசு தங்கம்' பாடல் இடம் பெற்றிருந்தது. தனது பாடலை எந்தவித முன் அனுமதியும் பெறாமல் பயன்படுத்தியதாக இளையராஜா தரப்பில் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது.

இந்த வழக்கை விசாரித்த நீதிபதி, இளையராஜா பாடலை ஜி.வி.பிரகாஷின் படத்தில் பயன்படுத்த தடை விதித்து உத்தரவிட்டார். ஜி.வி. பிரகாஷ் நடிப்பில் ஹேப்பி ராஜ் திரைப்படம் கடந்த மார்ச் 27ம் தேதி வெளியானது. படம் வெளியாகி 3 மாதத்திற்கு பிறகு இந்தத் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அன்னக்கிளி, 16 வயதினிலே உள்ளிட்ட 134 படங்களின் பாடல்களுக்கு இளையராஜா உரிமை கோர முடியாது என்று டில்லி உயர்நீதிமன்றம் அண்மையில் உத்தரவிட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

# TRB-ன் இறுதி எச்சரிக்கை! விண்ணப்பதாரர்களே உஷார்!



சென்னை, ஜூலை. 06–

தமிழ்நாடு அரசு கலை, அறிவியல் மற்றும் கல்வியியல் கல்லூரிகளில் 2,708 உதவிப் பேராசிரியர் பணியிடங்களுக்கான தேர்வில், ஆன்லைன் விண்ணப்பங்களில் ஏற்பட்ட பிழைகள் தொடர்பாக ஆசிரியர் தேர்வு வாரியம் (TRB) விளக்கம் அளித்துள்ளது.

வாரியத்தின் நடைமுறையின்படி, பெயர், பிறந்த தேதி, புகைப்படம் ஆகியவற்றில் ஏதேனும் இரண்டு விவரங்கள் சரியாக இருந்தால் மட்டுமே தேர்வுக்கான நுழைவுச் சீட்டு வழங்கப்படும். கல்வித் தகுதி, சமூகப் பிரிவு உள்ளிட்ட பிற விவரங்கள் சான்றிதழ் சரிபார்ப்பின் போது உறுதி செய்யப்படும்.

சில விண்ணப்பதாரர்கள் பிறந்த தேதிக்குப் பதிலாக சான்றிதழில் உள்ள வேறு தேதியை பதிவிட்டதும், மற்றொருவர் பெயருக்குப் பதிலாக சான்றிதழ் எண்ணை குறிப்பிட்டதும் கண்டறியப்பட்டதாக TRB தெரிவித்துள்ளது. உரிய ஆதாரங்களின் அடிப்படையில் அத்தகைய விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டதாகவும் கூறியுள்ளது.

ஆன்லைன் விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கும் போது அனைத்து விவரங்களையும் கவனமாக சரிபார்த்து பதிவு செய்யுமாறு ஆசிரியர் தேர்வு வாரியம் விண்ணப்பதாரர்களுக்கு அறிவுறுத்தியுள்ளது.

# மிதானம், பஞ்சமி நிலங்களை மீட்க கூட்டு இயக்கம் அமைக்க முடிவு!



ஒட்டன்சத்திரம், ஜூலை. 06–

திண்டுக்கல் மாவட்டத்தில் பூமிதானம் மற்றும் பஞ்சமி நிலங்களை மீட்டு உரிய பயனாளிகளிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி, தலித் விடுதலை இயக்கம் சார்பில் ஒட்டன்சத்திரத்தில் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

மாநிலத் தலைவர் ச. கருப்பையா தலைமை வகித்து பேசுகையில், மாவட்டத்தில் சுமார் 12,842 ஏக்கர் பூமிதானம் மற்றும் பஞ்சமி நிலங்கள் இருப்பதாகவும், அவற்றில் பெரும்பாலானவை தேவத்தூர், மண்டவாடி, ஜவ்வாதுபட்டி, கரட்டுப்பட்டி, அம்மாபட்டி உள்ளிட்ட பகுதிகளில் உள்ளதாகவும் தெரிவித்தார்.

நிலமற்ற மற்றும் வீடற்ற ஏழை மக்களுக்கான அரசுத் திட்டங்கள் முழுமையாக செயல்படாத நிலையில், ஆக்கிரமிக்கப்பட்ட பூமிதானம் மற்றும் பஞ்சமி நிலங்களை மீட்டு உரிய பயனாளிகளுக்கு வழங்குவதற்காக அனைத்து தரப்பு அமைப்புகள் மற்றும் ஒருமித்த கருத்துடைய அரசியல் கட்சிகளுடன் இணைந்து 'நிலம் மீட்பு கூட்டு இயக்கம்'செயல்படும் என்றும் அவர் கூறினார்.

கூட்டத்தில் மாவட்டத் தலைவர் தேவத்தூர் ராஜேந்திரன், ஐ.என்.டி.யு.சி. மாவட்டத் தலைவர் ஆர். பிச்சைமுத்து, சமூக ஆர்வலர்கள் மகுடீஸ்வரன், வி. காளிமுத்து உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

# வேளாண் பட்ஜெட்டுக்கு முன் மாவட்டந்தோறும் கருத்துக்கேட்பு அவசியம்! அமைச்சரிடம் நாமக்கல் எம்.பி. மாதேஸ்வரன் கோரிக்கை!!




நாமக்கல், ஜூலை. 06–

2026–27ஆம் ஆண்டுக்கான வேளாண் பட்ஜெட்டை முன்னிட்டு சேலத்தில் நடைபெற்ற 10 மாவட்ட வேளாண் கருத்துக்கேட்பு கூட்டத்தில், நாமக்கல் எம்.பி. மாதேஸ்வரன், நாமக்கல் விவசாயிகளின் கோரிக்கைகள் அடங்கிய மனுவை வேளாண்துறை அமைச்சர் வினோத் அவர்களிடம் வழங்கினார். 10 மாவட்டங்களை இணைத்து கருத்துக்கேட்பு நடத்துவதால் அனைத்து விவசாயிகளுக்கும் தங்களது கருத்துகளை பதிவு செய்ய வாய்ப்பு கிடைப்பதில்லை.

எனவே, இனி ஒவ்வொரு மாவட்டத்திலும் பட்ஜெட்டுக்கு முன் தனித்தனியாக வேளாண் கருத்துக்கேட்பு கூட்டங்களை நடத்த வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார். இக்கூட்டத்தில் கைத்தறித்துறை அமைச்சர், பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர், மாவட்ட ஆட்சியர்கள், எம்.பி.க்கள், எம்.எல்.ஏ.க்கள் மற்றும் வேளாண்துறை அதிகாரிகள் பங்கேற்றனர்.

# தனுஷ் ரசிகர் மன்ற கொடி அறிமுகம்!




சென்னை, ஜூலை. 06–

நடிகராக இருந்து விஜய் சக்சஸ் அரசியல்வாதியாக மாறி தற்போது முதலமைச்சராக உருவெடுத்திருக்கிறார். இந்நிலையில் நடிகர்கள் ஒவ்வொருவராக அரசியல் என்ட்ரிக்கு அச்சாரம் போட்டு வருகிறார்கள். அந்த வகையில் நடிகர் தனுஷ், தனது ரசிகர் நற்பணி மன்றத்தின் கொடியை அறிமுகப்படுத்தியிருக்கிறார். இது புதிய விவாதங்களை ஏற்படுத்தியிருக்கிறது.

தனுஷ் அறிமுகப்படுத்திய கொடியில் மேலே வெள்ளை நிறமும், கீழே சிவப்பு நிறமும் இடம்பெற்றிருக்கிறது. நடுவில் சிவப்புநட்சத்திரம் இடம் பெற்றிருக்கிறது.

பொதுவாக ரசிகர் மன்ற கொடி எனில், அதில் அந்த நடிகரின் உருவப்படம்தான் இடம்பெற்றிருக்கும். ஆனால், தனுஷ் வெளியிட்டிருக்கும் இந்த கொடியில், அவரது புகைப்படத்துடன் சேர்த்து நட்சத்திரம் இடம் பெற்றிருப்பது.. தனுஷ் அரசியல் என்ட்ரி கொடுக்க ட்ரை செய்கிறாரோ? என்கிற கேள்வியை எழுப்புவதாக பல்வேறு தரப்பினரும் கூறுகின்றனர்.

முன்னதாக நடிகர் சூர்யா நடிப்பில் வெளியாகியிருந்த கருப்பு திரைப்படத்தில், சூர்யா சட்டமன்றத்தில் அமர்ந்திருப்பதை போன்ற காட்சிகள் இடம்பெற்றிருந்தன. அப்படியெனில் சூர்யாவுக்கும் பொலிட்டிக்கல் ஆசை இருக்கிறது.. என பேசப்பட்டது. அவரது ரசிகர் மன்ற நிர்வாகி ஒருவர், சூர்யா விரைவில் அரசியல் என்ட்ரி கொடுக்கப்போகிறார் என்று பேசியிருந்தார். ஆனால், அப்படியெல்லாம் இல்லை என்று ரசிகர் மன்றம் விளக்கம் கொடுத்திருந்தது.

இப்படி சூர்யாவின் சலசலப்பு ஓய்வதற்குள் தற்போது தனுஷ் தனது ரசிகர் மன்ற கொடியை அறிமுகப்படுத்தி.. அரசியல் பேசுபவர்களுக்கு கண்டென்ட் கொடுத்திருக்கிறார்.

# வேலை வாய்ப்பு காரைக்குடி CECRI–யில் 84 பணியிடங்கள்!

CSIR – மத்திய மின்வேதியியல் ஆராய்ச்சி நிறுவனம் (CECRI), காரைக்குடி, PS06/2026 அறிவிப்பின் கீழ், ஒப்பந்த அடிப்படையில் 84 பணியிடங்களை நிரப்ப அறிவிப்பு வெளியிட்டுள்ளது. இதில் Senior Project Associate, Junior Research Fellow (P), Project AssociateII, Project Associate I, Project Assistant II உள்ளிட்ட பணியிடங்கள் இடம்பெற்றுள்ளன.

பணியிடங்கள்: 84
பணியிடம்: காரைக்குடி, சென்னை
பணிவகை: மத்திய அரசு ஒப்பந்த பணி
விண்ணப்பிக்கும் முறை: ஆன்லைன்
விண்ணப்பம் தொடங்கிய நாள்: 30.06.2026 (காலை 9.00 மணி)
கடைசி நாள்: 10.07.2026 (மாலை 5.00 மணி)

கல்வித் தகுதி, வயது வரம்பு, சம்பளம் ஆகியவை பணியிடத்திற்கு ஏற்ப மாறுபடும். பொதுவாக Diploma, B.Sc., B.E./B.Tech., M.Sc., M.E./M.Tech., Ph.D. தகுதி பெற்றவர்கள் விண்ணப்பிக்கலாம். தேர்வு Shortlisting மற்றும் Interview மூலம் நடைபெறும்.

அதிகாரப்பூர்வ அறிவிப்பு மற்றும் ஆன்லைன் விண்ணப்பம்: CECRI அதிகாரப்பூர்வ இணையதளம்: https://www.cecri.res.in/

## சினிமா துளிகள்..!

### இளையராஜாவின் அண்ணன் தயாரிப்பாளர் ஆர்.டி.பாஸ்கர் மகன் ஹீரோவாக அறிமுகம்!



இளையராஜாவின் மூத்த அண்ணனும், தயாரிப்பாளருமான ஆர்.டி.பாஸ்கரின் மகன் ஜெயன் ஹீரோவாக அறிமுகமாகும் படம், 'ராஜாஸ் பிளே லிஸ்ட்'.

காதல் மற்றும் இசைக்கு முக்கியத்துவம் கொடுத்து உருவாகும் இப்படத்தை சுஜித் என் சுப்ரமணியம் திரைக்கதை எழுதி இயக்குகிறார். இவர் 'குடும்பஸ்தன்' படத்தின் ஒளிப்பதிவாளர்.

# பிஹார் இடைத்தேர்தலில் பிரசாந்த் கிஷோர் போட்டி!



பாட்னா, ஜூலை. 06–

பிஹாரில் சட்டப்பேரவைத் தொகுதி இடைத்தேர்தலில், பிரசாந்த் கிஷோர் போட்டியிடுவார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

பிஹார் மாநிலத்தில் காலியாக உள்ள பங்கிபூர் சட்டப்பேரவை தொகுதிக்கு ஜூலை 30–ல் இடைத்தேர்தல் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. வேட்புமனு தாக்கல் செய்வதற்கான கடைசி நாள் ஜூலை 13 ஆகும். இந்நிலையில், ஜன் சுராஜ் கட்சியின் உயர்மட்டக் குழு கூட்டம் ஜூலை 4–ல் நடைபெற்றது. இக்கூட்டத்துக்குப் பிறகு அக்கட்சியின் மாநிலத் தலைவர் மனோஜ் பாரதி செய்தியாளர்களிடம் கூறும்போது, "பங்கிபூர் சட்டப்பேரவைத் தொகுதி இடைத்தேர்தலில், ஜன் சூரஜ் கட்சியின் வேட்பாளராக பிரசாந்த் கிஷோர் போட்டியிடுவார்" என்றார்.



இஸ்மாயில் லக்கி டிராவல்ஸ்
127, T.P.K.ரோடு, மதுரை.
Ph: 98659 88882
மதுரை to சென்னை ரெகுலர் சர்வீஸ் பஸ் மற்றும் பார்சல் சர்வீஸ் உள்ளது
சென்னை Ph: 98659 88881



# இன்றைய கார்ட்டூன்




## மூன்று நாடுகளுக்கு பிரதமர் மோடி அரசுமுறை பயணம்!!




புதுடெல்லி, ஜூலை. 06–
இந்தோனேசியா, ஆஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்துக்கு ஆறுநாள் அரசுமுறை பயணமாக பிரதமர் நரேந்திர மோடி புறப்பட்டார்.

பாதுகாப்பு, வர்த்தகம் மற்றும் தொழில்நுட்பம் குறித்துப் பேச்சுவார்த்தை நடத்துவதற்காக பிரதமர் மோடி இந்தோனேசியா, ஆஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்து ஆகிய மூன்று நாடுகளுக்குப் பயணம் மேற்கொண்டுள்ளார். இந்தப் பயணம், மூலோபாயக் கூட்டாண்மைகளை ஆழப்படுத்துவதையும், இந்தியாவின் 'கிழக்கு நோக்கிய செயல்பாடு' மற்றும் 'இந்தோ–பசிபிக்' முன்னுரிமைகளை முன்னெடுத்துச் செல்வதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

இந்தியக் கடற்படையின் 'மகாசாகர்' தொலைநோக்கத் திட்டத்தின் பாதுகாப்பு, நிலைத்தன்மை மற்றும் நாட்டின் வளர்ச்சியை மேலும் வலுப்படுத்தும் நோக்கில் இந்த பயணம் உள்ளது.

அத்துடன் இந்த பயணம், 140 கோடி மக்கள் தொகை கொண்ட இந்திய சந்தையில் ஏற்றுமதியை அதிகரிக்க புதிய வாய்ப்புகளை உருவாக்கும். இதன் மூலம் இந்தியாவிற்கு அதிக வருவாய் கிடைப்பதோடு, வேலை வாய்ப்புகள் உருவாக்கப்பட்டு ஊதியமும் உயரும்.

இந்த பயணத்தின் போது நாட்டின் தலைவர்களிடையே நடைபெறும் கலந்துரையாடலில் வர்த்தகம் மற்றும் முதலீடு, கடல்சார் பாதுகாப்பு, கல்வி, தொழில்நுட்பம், சுற்றுலா, விளையாட்டு மற்றும் உலகளாவிய பிரச்சினைகள் ஆகியவை இடம்பெற உள்ளது.

## டாஸ்மாக் பார்கள் மேலும் 3 மாதங்கள் இயங்க அனுமதி?






சென்னை, ஜூலை. 06–
டாஸ்மாக் நிறுவனத்திற்கு புகார் மனுக்கள் வரப்பெற்றுள்ளன. அவற்றில் கூறப்பட்டு இருப்பதாவது:– சென்னையில் இயங்கும் பார்கள் அமைந்துள்ள பல கட்டிடங்கள், சென்னை மாநகராட்சி அல்லது சி.எம்.டி.ஏ.விடம் இருந்து முறையான திட்ட அனுமதியை பெறவில்லை என்று தெரிகிறது. அதுமட்டுமல்லாமல் பார் அனுமதி பெறுவதற்காக பல போலியான ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

இவற்றினால் விபத்து நேரிட்டு, மதுபானம் அருந்துவோர் பாதிக்கப்படும் சூழ்நிலை உள்ளது. மேலும், 2019–ம் ஆண்டில் வழக்கு ஒன்றில் ஐகோர்ட்டு பிறப்பித்த உத்தரவில், கட்டிட திட்ட அனுமதியை முறையாக பெற்றுள்ள கட்டிடங்களில் மட்டும் மதுவிற்பனை கடைகளை அமைக்க அனுமதிக்க வேண்டும். அந்த கட்டிடம் மற்றும் அது அமைந்துள்ள நிலம் ஆகியவற்றுக்கான திட்ட அனுமதி, சட்டப்படி பெறப்பட்டுள்ளதா? என்பதை சம்பந்தப்பட்ட அதிகாரி சரிபார்க்க வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.

இந்த நிலையில் 6–ந்தேதி டாஸ்மாக் நிறுவனத்தின் உயர்நிலை கூட்டம் நடக்கிறது. இந்த கூட்டத்தில் மிக முக்கியமான முடிவுகள் எடுக்கப்பட உள்ளன. தற்போது நடத்தப்படும் பார்கள் இயங்க 3 மாதங்களுக்கு அனுமதி அளிக்க முடிவு செய்யப்பட உள்ளது. அது மட்டுமல்லாமல், பார்களை நடத்துவதற்கான மொத்தமுள்ள 54 விதிகளில் சில விதிகளை திருத்த முடிவு செய்யப்பட உள்ளது. இந்த திருத்தத்தின்படி, சென்னை மாநகராட்சி அல்லது சி.எம்.டி.ஏ. அல்லது டி.டி.சி.பி.யிடம் பெறப்பட்ட, கட்டிடங்கள் மற்றும் நிலத்துக்கான திட்ட அனுமதி ஆணைகள் சரிபார்க்கப்படும்.

உணவு கட்டுப்பா ட்டுத்துறை, தீயணைப்பு த்துறை போன்றவற்றிடம் இருந்து பெறப்பட்ட சான்றிதழ்களும் சரி பார்க்கப்படும். முறையான அனுமதி பெறாத கட்டிடங்களில் பார்கள் இயங்க உரிமம் தரக்கூடாது. அப்படி உரிமம் தரப்பட்டால் அது கோர்ட்டு அவமதிப்பு குற்றமாக கருதப்படும்.

போலி அனுமதி உத்தரவுகள் தரப்பட்டு இருந்தால், அவற்றின் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்? என்பது தொடர்பாகவும் விதிகளில் திருத்தம் கொண்டு வர முடிவு செய்யப்படும். இந்த திருத்தங்கள் அனைத்தும் எப்.எல்.2 என்ற மனமகிழ் மன்றங்களுக்கும் பொருந்தும். டெண்டர் விடுவதற்கான விதிகளிலும் திருத்தங்கள் இருக்கும் என்று கூறப்படுகிறது.

## புதுவையில் தவெக ஆதரவுடன் ஆட்சி அமைக்க ரங்கசாமி திட்டம்?



புதுச்சேரி, ஜூலை. 06–
கடந்த முறை ரங்கசாமிக்கு ஆட்சி அமைக்க வேறு வாய்ப்புகள் இல்லாமல் இருந்தது. ஆனால் இந்த முறை தவெக கூட்டணி 3 எம்எல்ஏக்களை பெற்றுள்ளது என்ஆர்.காங்கிரசுக்கு புதிய வாய்ப்பை ஏற்படுத்தியுள்ளது.

2 தொகுதியில் போட்டியிட்ட முதல்–அமைச்சர் ரங்கசாமி ஒரு தொகுதியை ராஜினாமா செய்துவிட்டார். இதனால் சட்டசபையில் எம்எல்ஏக்கள் எண்ணிக்கை 29 ஆக உள்ளது. இதில் ஆட்சிக்கு 15 எம்எல்ஏக்கள் ஆதரவு இருந்தால்போதும். இதன்படி பாஜக ஆதரவு இல்லாமல், என்ஆர். காங்கிரசால் ஆட்சியமைக்க முடியும். ஏனெனில் என்ஆர். காங்கிரசுக்கு 11, தவெக கூட்டணி 3, அதிமுக 1, சுயேச்சைகள் 2 என 17 எம்எல்ஏக்கள் ஆதரவு கிடைக்கும். இதனால் பாஜகவுடன் மோதல் முடிவுக்கு வரா விட்டால், மாற்று ஏற்பாடாக தவெகவுடன் இணைந்து ஆட்சி அமைக்கவும் ரங்கசாமி திட்டமிட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளது. இதனால் புதுவை அரசியல் பரபரப்பு நிலவி வருகிறது.

## உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கியை சந்திக்கும் டிரம்ப்!



துருக்கி, ஜூலை. 06–
துருக்கியில் நடைபெறும் நேட்டோ உச்சி மாநாட்டின் இடையே உக்ரைன் மற்றும் சிரிய நாட்டு அதிபர்களை அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்ப் சந்திக்க இருப்பதாக வெள்ளை மாளிகை தெரிவித்தது.

"புதன்கிழமை பிற்பகலில், அதிபர் டிரம்ப், உக்ரைன் அதிபர் ஜெலென்ஸ்கி மற்றும் சிரிய அரபு குடியரசின் அதிபர் அல்–ஷாரா ஆகியோருடன் இருதரப்பு சந்திப்பு களில் பங்கேற்பார்," என்று துணைப் பத்திரிகை செயலாளர் அன்னா கெல்லி செய்தியாளர்களுடனான தொலைபேசி உரையாடலில் தெரிவித்தார்.



முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் பிறந்தநாள் விழாவினை முன்னிட்டு திருப்பூரில் நடைபெற்ற பொதுக்கூட்ட விழாவிற்கு திருப்பூர் மத்திய மாவட்டம் கருவம்பாளையம் பகுதி கழகம் சார்பில் 43 வது வட்டக் கழக செயலாளர் பி கே கணேசன் மற்றும் பல்லடம் சரவணன் தலைமையில் நிர்வாகிகள் பங்கேற்றனர் இதில் ஆனந்தி சந்தோஷ் பொறி கண்ணன் மற்றும் பலர் பங்கேற்றனர்...

## நாகை துறைமுகத்தில் 1-ம் எண் புயல் எச்சரிக்கை கூண்டு ஏற்றம்!



நாகப்பட்டினம், ஜூலை. 06–
மத்திய வங்கக்கடலின் சில பகுதிகளில் மணிக்கு 45 கி.மீ. முதல் 55 கி.மீ. வேகத்தில் காற்று வீசக்கூடும் என வானிலை ஆய்வு மையம் எச்சரிக்கை விடுத்துள்ளதையடுத்து நாகை துறைமுகத்தில் 1–ம் எண் புயல் எச்சரிக்கை கூண்டு ஏற்றப்பட்டது.

மத்திய அரபிக்கடல், தெற்கு வங்கக்கடல், மத்திய வங்கக்கடலின் சில பகுதிகளில் மணிக்கு 45 கி.மீ. முதல் 55 கி.மீ. வேகத்திலும் அதிகபட்சமாக 65 கி.மீ. வேகத்திலும் காற்று வீசக்கூடும் என சென்னை வானிலை ஆய்வு மையம் எச்சரிக்கை விடுத்துள்ளது. இதையடுத்து நேற்று மாலை நாகை துறைமுகத்தில் 1–ம் எண் புயல் எச்சரிக்கை கூண்டு ஏற்றப்பட்டது.

கடலில் புயல் உருவாகக் கூடிய வானிலை சூழல் தொடங்கி உள்ளது என்பதை குறிக்கும் வகையில் இந்த எச்சரிக்கை கூண்டு ஏற்றப்பட்டிருப்பதாக அதிகாரிகள் தெரிவித்தனர். மேலும் நாகை மாவட்டத்தை சேர்ந்த விசைப்படகு மற்றும் நாட்டுப்படகு மீனவர்கள் நாளை (செவ்வாய்க்கிழமை) வரை கடலுக்கு மீன்பிடிக்க செல்ல வேண்டாம் மீன் வளம் மற்றும் மீனவர் நலத்துறையினர் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

## வார தொடக்கத்தில் குறைந்த தங்கம் விலை!



சென்னை, ஜூலை. 06–
சென்னையில் இன்று 22 கேரட் ஆபரணத் தங்கத்தின் விலை சவரனுக்கு ரூ.1,120 குறைந்து ரூ.1,08,480–க்கு விற்பனை செய்யப்படுகிறது. தங்கம் விலை கிராமுக்கு ரூ.140 குறைந்து ரூ.13,560–க்கு விற்பனை செய்யப்படுகிறது.

தங்கத்தை போன்று வெள்ளி விலையும் இன்று குறைந்துள்ளது. வெள்ளி விலை கிராமுக்கு ரூ.10 குறைந்து ஒரு கிராம் வெள்ளி ரூ.250–க்கும், பார் வெள்ளி 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய்க்கும் விற்பனை செய்யப்படுகிறது.

## மும்பைக்கு ரெட் அலர்ட்!



மும்பை, ஜூலை. 06–
மும்பை, பால்கர், ராய்கட் மற்றும் தானே ஆகிய பகுதிகளில் ஆங்காங்கே மணிக்கு 50–60 கி.மீ. வேகத்தில் பலத்த காற்றுடன் கூடிய கனமழை பெய்யக்கூடும் என கணிக்கப்பட்டுள்ளது. இதனால் அதிக கனமழைக்கான ரெட் அலெர்ட் இந்திய வானிலை மையம் விடுத்துள்ளது.




மதுரை மாவட்டம் விளாச்சேரியில் தமிழறிஞர் பரிதிமாற் கலைஞர் அவர்களின் 156வது பிறந்தநாளை முன்னிட்டு அவரது நினைவு இல்லத்தில் உள்ள திருவுருவசிலைக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் நிஷாந்த் கிருஷ்ணா மாலையணிவித்து மரியாதை செய்து வரலாற்று புகைப்படங்களை பார்வையிட்டார். சட்டமன்ற உறுப்பினர்கள் சோ.கார்த்திகேயன் (மதுரை கிழக்கு), எம்.எம்.கோபிசன் (மதுரை தெற்கு), மதுரை வருவாய் கோட்டாட்சியர் கருணாகரன், செயதி மக்கள் தொடர்பு அலுவலர் பெ.ரா.வெற்றிவேந்தன், உதவி மக்கள் தொடர்பு அலுவலர் (செய்தி) வா.பொ.வினோத் ஆகியோர் உடன் உள்ளனர்.

## லாரி உரிமையாளர்களுடன் அமைச்சர் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும்; கொமதேக பொதுச்செயலாளர் ஈஸ்வரன் வலியுறுத்தல்!



சென்னை, ஜூலை. 06–
தமிழக போக்குவரத்துத் துறை அமைச்சர், லாரி உரிமையாளர்கள் சங்க நிர்வாகிகளை அழைத்துப் பேசி, லாரித் தொழிலில் நீடித்து வரும் பிரச்சினைகளுக்கு தீர்வு காண வேண்டும் என்று கொங்கு நாடு மக்கள் தேசிய கட்சி (கொமதேக) பொதுச்செயலாளர் ஈஸ்வரன் வலியுறுத்தியுள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், இந்திய அளவில் சாலைப் போக்குவரத்துத் துறையில் நாமக்கல் முன்னணி மாவட்டமாக விளங்குவதாகவும், லட்சக்கணக்கான குடும்பங்களின் வாழ்வாதாரமாக லாரித் தொழில் இருப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

உதிரிபாகங்கள் மற்றும் டீசல் விலை உயர்வு, ஆன்லைன் வரிவிதிப்பு, காலாவதியான சுங்கச்சாவடிகள் அகற்றப்படாதது, கட்டாய ஜி.பி.எஸ்., 3எம் ஸ்டிக்கர் நடைமுறை, டிரைவர் பற்றாக்குறை உள்ளிட்ட காரணங்களால் லாரித் தொழில் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

மேலும், எப்.சி., ஆர்.சி. உள்ளிட்ட வாகன ஆவணங்களை மீண்டும் நேரடியாக வழங்குதல் உள்ளிட்ட நீண்டகால கோரிக்கைகளை நிறைவேற்றவும், லாரி உரிமையாளர்களுடன் ஆலோசித்து உரிய நடவடிக்கை எடுக்கவும் அமைச்சர் முன்வர வேண்டும் என அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

## தமிழக வெற்றி கழகம் சார்பில் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா!



திருப்பூர், ஜூலை. 06–
முதல்வர் ஜோசப் விஜய் பிறந்த நாள்: 1,253 பேருக்கு நலத்திட்ட உதவிகள் தமிழக வெற்றி கழகம் சார்பில், தமிழ்நாடு முதலமைச்சர் ஜோசப் விஜய் பிறந்த நாளை முன்னிட்டு, புதிய பேருந்து நிலையம் பகுதி 16 வார்டு சுற்றுச்சூழல் அணி சார்பில் 1,253 பேருக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நடைபெற்றது.

மாநகர் மாவட்ட செயலாளரும் தெற்கு தொகுதி சட்டப்பேரவை உறுப்பினருமான பாலமுருகன், வடக்கு சட்டமன்ற உறுப்பினர் சத்தியபாமா ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டு விழாவை தொடங்கி வைத்தனர்.

விழாவில் 3 பேருக்கு தையல் இயந்திரம், 1,000 பேருக்கு சேலைகள், 100 பேருக்கு ஒரு மாதத்திற்கான மளிகைப் பொருட்கள், 150 குழந்தைகளுக்கு நோட்டுப் புத்தகம் மற்றும் பேனா, 50 ஆட்டோ ஓட்டுநர்களுக்கு சட்டைகள் வழங்கப்பட்டதுடன், அனைவருக்கும் அறுசுவை உணவும் வழங்கப்பட்டது.

விழாவிற்கு செந்தில்மணி தலைமை வகித்தார். மாநகர மாவட்ட சுற்றுச்சூழல் அணி அமைப்பாளர் விஷ்ணு, இணை அமைப்பாளர்கள் சங்கர், பிரகாஷ்குமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர். நந்தகோபால் நன்றி கூறினார்.

நிர்வாகிகள் அனிதா, நவீன், பிரேம், நாகவிஷ்ணு, ரமேஷ், முஹம்மது உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.




Printed by Dr.P.Pandiarajan, Printed at Raja Printers at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Published by Dr.P.Pandiarajan, at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Editor: Dr.P.Pandiarajan. TN/WPP-143/SR/2018-2020